**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 406/2015**

**நாள்.25.03.2026**

**பி.வா.சா. 1- தங்கமணி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்குப் போட்டுள்ள சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியம் என்றால் நாரணம்மாள் என்பவருக்குப் பாத்தியம். மேற்படி நாரணம்மாளுக்கு மொத்தம் 66 சென்ட் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி 66 சென்டில் நான் எவ்வளவு சென்ட் கிரையம் வாங்கினேன் என்றால் கீழ்ப்பக்கம் உள்ள 33 சென்ட் கிரையம் வாங்கினேன். மேற்படி 66 சென்டில் மேல்பக்கம் உள்ள 33 சென்ட் யாருக்கு பாத்தியம் என்றால் வேதமாணிக்கம் என்பவருக்குப் பாத்தியம். நானும், வேதமாணிக்கமும் ஒரே நாளில் பாதி பாதியாக கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். நானும், வேதமாணிக்கமும் நாரணம்மாளிடம் சேர்ந்துதான் கிரையம் பேசி இருவரும் பாதி பாதியாக கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். மேல்பக்கம் உள்ள 33 சென்ட் கிரையம் வாங்கிய வேதமாணிக்கத்திற்கு கீழ்பக்கம் உள்ள 33 சென்ட்டில் எந்த பாத்தியமும் கிடையாது அதே போல் எனக்கும் வேதமாணிக்கத்தின் 33 சென்ட்டில் எந்த பாத்தியமும் கிடையாது என்றால் சரிதான். மேல்பக்கம் உள்ள 33 சென்ட் கிரையம் வாங்கிய வேதமாணிக்கத்தின் மேற்படி சொத்தில் எனக்கு தனிப்பட்ட எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய கீழ்பக்கம் உள்ள 33 சென்ட்டில் வடகடைசியில் உள்ள 3 சென்ட்டை வாதி சாந்தம்மாளுக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். வடகடைசிக்கு அடுத்த தென்புறமுள்ள 3 சென்ட்டை முத்தையா என்பவருக்கு நான் கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி வாதி மற்றும் முத்தையாவுக்கு கொடுத்த கிரையத்தில் பொதுநடைபாதை காண்பித்து தான் கிரையம் கொடுத்தேன் என்றால் பொதுநடைபாதை எதுவும் காண்பிக்கவில்லை. வேதமாணிக்கத்திற்கும் எனக்கும் என்ன உறவு என்றால் சித்தப்பா உறவுமுறை வேண்டும்.

நான் கிரையம் வாங்கிய கீழ்பக்கம் உள்ள 33 சென்ட்டில் முத்தையாவுக்கு கொடுத்த 3 சென்ட்டை எப்போது நான் எனது மனைவி பெயரில் மறுகிரையம் வாங்கினேன் என்றால் மறுகிரையம் வாங்கினேன் ஆனால் ஆண்டு, மாதம், தேதி ஞாபகமில்லை. முத்தையாவிடமிருந்து எனது மனைவி பெயரில் மறுகிரையம் வாங்கிய சொத்தில் நான் வீடு கட்டியுள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் கிரையம் வாங்கப்பட்டதிலிருந்து 12 ஆண்டுகள் கழித்து கட்டினேன். நான் கிரையம் வாங்கிய கீழ்பக்கம் உள்ள 33 சென்ட்டில் தென்பக்கம் என் கைவசமுள்ள சொத்தில் வீடு உள்ளதா? மேற்படி வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது ? என்றால் ஆமாம் அந்த வீடு கட்டப்பட்டு 20-25 வருடங்கள் இருக்கும். மேற்படி வீட்டின் வாசல் எந்தப் பக்கம் உள்ளது என்றால் மெயின்ரோட்டைப் பார்த்து தெற்கே உள்ளது. எனது இடத்திற்கு கீழ்புறமுள்ள பாதை வழியாகத்தான் எனது மனைவி சொத்தில் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு செல்ல முடியும் என்றால் சரிதான் எனது இடம் வழியாகத்தான் செல்ல முடியும். எனது இடத்திற்கு கீழ்புறமுள்ள பாதை எனக்கும் எனது மனைவிக்கும் பொதுவான பாதை என்றால் எனக்கும் எனது மனைவிக்கும் மட்டும் பாத்தியப்பட்ட பாதை. எனது இடத்திற்கு கீழ்புறமுள்ள பாதை வழியாக வாதி அவரது இடத்திற்கு செல்வதில்தான் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எனது இடத்திற்கு கீழ்புறம் உள்ள எனது மனைவிக்கும் மட்டும் பாத்தியப்பட்ட பாதை என நான் சொல்லக்கூடிய பகுதிக்கும், வேதமாணிக்கம் பொதுபாதைக்கு விட்டுள்ள இடத்திற்கும் எவ்வளவு அகலமுள்ள இடம் உள்ளது என்றால் பாதையாக இல்லாமல் திறந்தவெளியாக உள்ளது எனக்கு 27 சென்ட் பாத்தியம் அது மட்டும் தான் தெரியும். இந்த வழக்கிற்கு முன்பாக சர்வே கல் நட்டினேன் என்றால் சரிதான். எனது வீட்டின் கீழ்பக்க சுவரிலிருந்து எவ்வளவு தூர இடைவெளியில் கல் நட்டினேன் என்றால் இடம் நிறைய உள்ளது அளவு தெரியாது. 2015 ல் கல் நடுவதற்கு முன்பாக வாதி அந்த இடத்து வழியாகத்தான் தனது இடத்திற்கு சென்று வந்தார் என்றால் சரியல்ல.

2015ல் கல் நடுவதற்கு முன்பாக வாதி அந்த இடத்து வழியாகத்தான் தனது இடத்திற்கு சென்று வந்தார் நான் அதை தடை செய்து கல் நட்டினேன் அதனால் தான் இந்த வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் 2015ல் கல் நடும்போது வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். போலிசார் என்ன சொன்னார்கள் என்றால் போலிசார் இடத்தைப் பார்த்துவிட்டு, வாதியிடம் எனது இடத்தில் கல் ஊன்றப்பட்டிருப்பதை தொந்தரவு செய்யக்கூடாது என சொன்னார்கள் எனது இடத்தில் கல் ஊன்றப்பட்டிருப்பதை வாதி உடைத்தார் மீண்டும் அந்த கல்லை போலிசார் ஊன்றிக் கொடுத்தார்கள். போலிஸ் ஸ்டேசனில் இது போன்ற நடவடிக்கைகள் செய்ததால் வாதி இந்த வழக்கைத் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் வாதிக்கு கிரையம் கொடுத்த இடத்திற்கு வடக்கே யார் சொத்து என்றால் கருப்பன் சொத்து. கருப்பன் சொத்து வழியாக வாதிக்கு பாதை கிடையாது என்றால் சரிதான். நான் வாதிக்கு கிரையம் கொடுத்த இடத்திற்கு மேல்புறம் யார் சொத்து என்றால் வேதமாணிக்கம். நான் வாதிக்கு கிரையம் கொடுத்த இடத்திற்கு கீழ்புறம் யார் சொத்து என்றால் எனது கைவசமுள்ள சொத்து. நான் வாதிக்கு கிரையம் கொடுத்த இடத்திற்கு கீழ்புறம் நல்லம்மாள் புஞ்சை என்றால் சரிதான். நான் வாதிக்கு கிரையம் கொடுத்த இடத்திற்கு கீழ்புறம் உள்ள நல்லம்மாள் புஞ்சைக்கும் வாதி இடத்திற்கும் சம்பந்தம் கிடையாது அங்கு பாதை உரிமை வாதிக்கு கிடையாது என்றால் சரிதான். நான் வாதிக்கு கிரையம் கொடுத்த இடத்திற்கு மெயின் ரோட்டிலிருந்து வடக்காக செல்லும் பாதையைத் தவிர வேறு பாதை கிடையாது என்றால் வேதமாணிக்கம் பிளாட் போட்டு விற்ற இடத்தில் தான் பாதை வேறு பாதை கிடையாது. வேதமாணிக்கம் அமைத்திருந்த பொதுப்பாதையில் தற்போது ஆட்டோ, டிராக்டர் செல்லக்கூடிய அளவில் பாதை அகலமில்லை என்றால் 8 அடி பாதை உள்ளது தற்போது ஆட்டோ, டிராக்டர் செல்லக்கூடிய அளவில் அகலமாக உள்ளது.

முன்பு நான் நேர் வடக்காக புஞ்சை நிலங்களுக்கு சென்று வந்தேன் தற்போது பாதையை அடைத்ததால் சுற்றி செல்கிறேன் என்றால் சரியல்ல பாதை எதுவும் அடைக்கப்படவில்லை எங்கள் இடத்தில் தான் சர்வே கல் ஊன்றினோம். இந்த வழக்கிற்கு முன்பாக சர்வே கல் ஊன்றுவதற்கு முன்பாக நான் கிரையம் வாங்கிய காலத்திலிருந்து கல் இல்லாமல் காலியாகத்தான் இருந்தது என்றால் சும்மா தான் இருந்தது வீடு கட்டியபிறகு சர்வே செய்து கல் ஊன்றினோம். எனது மனைவி பெயரில் வாங்கப்பட்ட கிரையப் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் வங்கியில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 க்கு நகல் எடுத்து தாக்கல் செய்துள்ள நான், எதற்காக எனது மனைவி பெயரில் வாங்கப்பட்ட கிரையப் பத்திரத்தை நகல் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லை என நகல் எடுத்து தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 எனது மனைவி பெயரில் வாங்கப்பட்ட கிரையப் பத்திரம் என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. எனது மனைவி பெயரில் வாங்கப்பட்ட கிரையப் பத்திரத்தில் மேல்பக்க எல்கையாக பொதுநடைபாதைக்கும் கிழக்கு என சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல அப்படி சொல்லவில்லை. எனது மனைவி பெயரில் வாங்கப்பட்ட கிரையப் பத்திரத்தில் மேல்பக்க எல்கையாக பொதுநடைபாதைக்கும் கிழக்கு என சொல்லப்பட்டிருந்தால் அந்த பாதையை நான் விட்டுக்கொடுக்க தயாரா என்றால் அப்படி சொல்லப்பட்டிருக்காது அப்படி சொல்லியிருந்தாலும் அது என்னுடைய இடம் அதை நான் விட்டுக்கொடுக்க மாட்டேன். நான் தான் வாதிக்கு இடத்தை கிரையம் கொடுத்துள்ளேன் அதனால் வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்குக் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய பொதுப்பாதை என்பது எனக்கும், என்னிடம் கிரையம் வாங்கிய முத்தையா மற்றும் வாதிக்கான பொதுப்பாதை என்றால் சரியல்ல. 2015 க்கு முன்பு வாதி எனது வீட்டுக்கு கீழ்பக்கம் இருக்கக்கூடிய பாதையை பொதுப்பாதையாக அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

நான் வாதியை இடைஞ்சல் செய்ய வேண்டும் அத்துமீறி இந்த வழக்கிற்கு முன்பாக கல் ஊன்றினேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த இடத்தின் உரிமை தான் வாதி கேட்கக்கூடிய பாதை அதை மறுக்க எனக்கு அருகதை கிடையாது என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியது நான் உண்மையை மறைக்க பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 வரைபடம் இந்த வழக்கிற்கு உதவக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 பட்டா வாதியை கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.25 18:34:13 +0530